1968 மார்ச் 8]

இளநிலை தொழில் நுட்ப பள்ளிகள்.

*171 வினா : திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் Junior Technical Schools எத்தனை ?

(இ) நடப்பு ஆண்டில் அவற்றில் விரிவுரையாளர் Lecturer பதவிகள் குறைக்கப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 11.

(இ) இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : அந்தப் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் எத்தனை பேர் ? இந்த ஆண்டு குறைந்த சம்பளம் என்ற சலுகை அளிப்பதனால் அதிக மாணவர்கள் அந்தப் பள்ளிகளில் சேருவதற்கு வாய்ப்பு இருப்பதன் காரணமாக அந்தப் பள்ளிகளில் ஷிப்டு முறையை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே அரசாங்கத்தின் சார்பாக 11 பள்ளிகளும் தனியார் துறையில் 4 பள்ளிகளும் இருக்கின்றன. எவ்வளவு பேர்கள் படிக்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. நெருக்கடி இருந்து இடம் அதிகப்படுத்த வேண்டிய வாய்ப்பு இருக்குமானால் அதுபற்றி யோசிக்கப்படும்.

சிமிட்டி உற்பத்தி

*172 வினா : திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் வருடாந்திர சிமெண்ட் தேவை எவ்வளவு ?

(இ) நமது ராஜ்யத்திலுள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளின் வருட உற்பத்தி எவ்வளவு ?

(உ) அதில் வெளி ராஜ்யம் அல்லது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது எவ்வளவு ?

மாண்புமிகு திரு.மு. கருணாநிதி : (அ) இம் மாநிலத்திற்கு ஆண்டு தோறும் தோராயமாய் சுமார் 10,00,000 டன் சிமிண்ட் தேவைப் படுகிறது.

(இ) இம்மாநிலத்தில் உள்ள சிமிட்டித் தொழிற்சாலைகளில் ஆண்டு தோறும் தோராயமாய் சுமார் 19·5இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்ட் உற்பத்தி செய்யப்படுகிறது.

(உ) 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் நாளுடன் முடியும் ஆண்டில், 9,74,600 டன் சிமிண்ட் இந்நாட்டின் பிற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. இக்கால அளவில் இந்தியாவிற்கு வெளியில் உள்ள நாடுகளுக்கு சிமிண்ட் ஏற்றுமதி எதுவும் செய்யப்படவில்லை.

திரு. கே. விநாயகம் : சார், இந்த சிமிண்ட் விஷயத்தில் கண்ட்ரோல் இருந்த நேரத்தில் பொதுமக்களுக்கு அதிகத் தொல்லைகள் ஏற்பட்டன. இப்பொழுது அதை நீக்கிவிட்டதனாலே சுலபமாக கிடைக்கிறது. மறுபடியும் கண்ட்ரோல் கொண்டுவரப் படுவதாகச் சொல்லப் படுகிறது. அந்தத் துறையிலே இந்தஅ அரசாங்கம் என்ன நினைக்கிறது ? இப்படியே கண்ட்ரோ இல்லமல் விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?